# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - நிலக்கோளம் – II புவி புறச்செயல்பாடுகள் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 40

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

26 x 1 = 26

1) பாறைகளின் சிதைவுறுதலும் அழிதலும் _________ என்று அழைக்கப்படுகிறது

**(அ) வானிலைச் சிதைவு** (ஆ) அரித்தல் (இ) கடத்துதல் (ஈ) படியவைத்தல்

2) இயற்கைக் காரணிகளால் நிலம் சமப்படுத்தப்படுதலை ______ என்று அழைக்கின்றோம்.

(அ) பதிவுகளால் நிரப்படுத்தல் (ஆ) அரிப்பினால் சமப்படுத்துதல் **(இ) நிலத்தோற்ற வாட்டம் அமைத்தல்** (ஈ) ஏதுமில்லை

3) _______ ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்

(அ) துள்ளல் (ஆ) வண்டல் விசிறி **(இ) டெல்டா** (ஈ) மலை இடுக்கு

4) சுண்ணாம்புப் பாறை நிலத்தோற்றங்கள் உருவாவதற்கு காரணம்

(அ) பனியாறு (ஆ) காற்று (இ) கடல்அலைகள் **(ஈ) நிலத்தடி நீர்**

5) கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலத்தோற்றங்களில் எது பனியாறுகளின் படியவைத்தலால் உருவாக்கப்படவில்லை

**(அ) சர்க்** (ஆ) மொரைன் (இ) டிரம்லின் (ஈ) எஸ்கர்

6) காற்றின் படியவைத்தலால் உருவாக்கப்படும் மென்படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம்_____ஆகும்

**(அ) காற்றடி வண்டல்** (ஆ) பர்கான் (இ) ஹமாடா (ஈ) மணல் சிற்றலைகள்

7) கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் _____________

**(அ) கடல் அலை அரித்தல்** (ஆ) ஆற்று நீர் அரித்தல் (இ) பனியாறு அரித்தல் (ஈ) காற்றின் படியவைத்தல்

8) _______ ன் அரித்தல் செய்கையினால் சர்க்குகள் உருவாக்கப்படுகின்றன

(அ) காற்று **(ஆ) பனியாறு** (இ) ஆறு (ஈ) நிலத்தடி நீர்

9) கீழ்க்கண்டவற்றில் எது இரண்டாம் நிலை நிலத்தோற்றம்?

(அ) ஆசியா **(ஆ) தக்காண பீடபூமி** (இ) குலு பள்ளத்தாக்கு (ஈ) மெரினா கடற்கரை

10) சிதைவடைந்த நுண்ணிய பாறைத் துகள்கள் மற்றும் சிதைந்த உயிரினங்களின் கலவை______

(அ) பாறை (ஆ) மலை **(இ) மண்** (ஈ) பனி

11) வளி மண்டலத்திலுள்ள கார்பன்-டை ஆக்ஸைடு நீரில் கரைந்து ____ அமிலமாக மாறுகிறது.

(அ) கந்தக அமிலம் **(ஆ) கார்பானிக் அமிலம்** (இ) நைட்ரிக் அமிலம் (ஈ) எதுவுமில்லை

12) மிக அதிக அளவில் சமன்படுத்துதல் அமைக்கும் செயல்முறைகளை ஏற்படுத்தும் முக்கியக் காரணி

(அ) காற்று (ஆ) பனியாறு (இ) கடல் அலை **(ஈ) ஆறு**

13) இளநிலை ஆற்றின் முதன்மையான செயல்

**(அ) அரித்தல்** (ஆ) கடத்துதல் (இ) படியவைத்தல் (ஈ) எதுவுமில்லை

14) கால்சியம் கார்பனேட் கலந்த நீர் தரையில் படிந்து மேல்நோக்கி வளர்வது

**(அ) கல்முளை** (ஆ) கல் விழுது (இ) அரொட்டு (ஈ) சர்க்கு

15) மிகக் கனமான காற்றடி வண்டல் படிவம் கொண்ட பீடபூமி காணப்படும் நாடு

(அ) இந்தியா (ஆ) அமெரிக்கா **(இ) சீனா** (ஈ) ஜப்பான்

16) வேதியியல் மாற்றும் ஏதும் அடையாமல் பாறைகள் உடைபடுவது _____ எனப்படுகிறது.

**(அ) இயற் சிதைவு** (ஆ) உயிரினச் சிதைவு (இ) வேதியியல் சிதைவு (ஈ) சமன்படுத்துதல்

17) உலகிலேயே மிக அதிக உயரமான நீர்வீழ்ச்சி ____ நீர்வீழ்ச்சியாகும்.

(அ) ஜோக் (ஆ) விக்டோரியா (இ) நயாகரா **(ஈ) ஏஞ்சல்**

18) உலகின் மிகப் பெரிய டெல்டா, ________ டெல்டா ஆகும்.

**(அ) நைல்** (ஆ) மஞ்சள் ஆறு (இ) மிசிசிப்பி (ஈ) கங்கை, பிரம்மபுத்திரா

19) சுண்ணாம்பு பிரதேச நிலத்தோற்றங்களில் ஒன்றான போரா குகைகள் காணப்படும் மாநிலம் ______

**(அ) ஆந்திரப் பிரதேசம்** (ஆ) சத்தீஸ்கர் (இ) உத்தராகண்ட் (ஈ) பீஹார்

20) உலகின் மிக ஆழமான உறிஞ்சு துளை (sink hole) _________ வில் 2172 அடி ஆழத்தில் காணப்படுவதாகும்.

(அ) வியன்னா (ஆ) அமெரிக்கா **(இ) சீனா** (ஈ) இந்தியா

21) பனியாறு அரித்தலால் உருவாகும் நிலத்தோற்றங்கள் __________ போன்ற நாடுகளில் அதிகம் காணப்படுகின்றன.

(அ) இங்கிலாந்து, அயர்லாந்து (ஆ) சீனா, ரஷ்யா (இ) ஸ்பெயின், டென்மார்க் **(ஈ) சுவிட்சர்லாந்து, நார்வே**

22) முதுநிலையில் ஆறுகள் மிகவும் குறைவான வேகத்தில் வளைந்து செல்லுதல் _______ எனப்படும்.

(அ) அரெட்டு **(ஆ) மியான்டர்** (இ) எஸ்கர் (ஈ) டிரம்ளின்

23) ஆற்றின் இளநிலையின் முதன்மைச் செயல்

(அ) படிய வைத்தல் (ஆ) கறைத்தல் (இ) கடத்துதல் **(ஈ) அரித்தல்**

24) ஆற்றின் இளநிலையில் தோற்றுவிக்கும் நிலத்தோற்றம்

**(அ) 'V' வடிவ பள்ளதாக்கு** (ஆ) 'u' வடிவ பள்ளதாக்கு (இ) 'm' வடிவ பள்ளதாக்கு (ஈ) 'W' வடிவ பள்ளதாக்கு

25) உலகிலேயே மிக அதிக உயரமான ஏஞ்சல் நீர்வீழ்ச்சி அமைந்துள்ள நாடு.

(அ) கியூபா (ஆ) பிரேசில் (இ) அர்ஜன்டினா **(ஈ) வெனிசுலா**

26) பீகாரிலுள்ள ______ ஆசியாவின் மிகப்பெரிய நன்னீர் குருட்டு ஆறு ஆகும்.

**(அ) கன்வர் ஏரி** (ஆ) டால் ஏரி (இ) சிக்காட் ஏரி (ஈ) மானரேவர் ஏரி

**கோடிட்ட இடங்களை நிரப்புக** 14 x 1 = 14

27) அகச் செயல்முறைகள் புவியின் உட்புற ______ இயக்கப்படுகின்றன.

**வெப்பத்தால்**

28) வானிலைச் சிதைவு _____ வகைப்படும்.

**மூன்று**

29) ஆசியாவிலுள்ள மிகப்பெரிய நன்னீர் குருட்டாறு பீஹாரிலுள்ள _____ ஏரியாகும்.

**கன்வர் ஏரி**

30) தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான டெல்டா ______ஆகும்.

**காவேரி**

31) ஆஸ்திரேலியாவின் கடற்கரையில் அமைந்துள்ள _______ உலகின் மிகப்பெரிய சுண்ணாம்புப் பிரதேச நிலத்தோற்றமாகும்.

**நல்லர்பார்**

32) கால்சியம் கார்பனேட் கலந்த நீர் தரையில் படிந்து மேல் நோக்கி வளர்வது,_______ எனப்படுகிறது.

**கல்முளை**

33) பனி குவிந்து காணப்படும் இடம் ______ என அழைக்கப்படுகிறது.

**பனிவயல்**

34) பனியாறுகள் _____ ,________ என இருவகைப்படும்.

**கண்டப்பனியாறு, பள்ளத்தாக்குப் பனியாறு**

35) முதன்மை பனியாற்றினால் உருவாக்கப்பட்ட பள்ளத்தாக்கின் மீது அமைந்திருக்கும் துணைப் பனியாற்றின் பள்ளத்தாக்கு _____ ஆகும்.

**தொங்கும் பள்ளத்தாக்கு**

36) 'இன்சல்பர்க்' என்ற ஜெர்மானிய வார்த்தையின் பொருள் ____ ஆகும்.

**தீவுமலை**

37) பிறை வடிவத்தில் தனித்துக் காணப்படும் மணல் மேடுகள் ____ என அழைக்கப்படுகின்றன.

**பர்கான்கள்**

38) கடல் நீர் மேலெழும்பி சரிவதே _____ எனப்படுகிறது.

**கடலலை**

39) சென்னையிலுள்ள கடற்கரை____

**மெரினா**

40) கடற்கரையோரத்தில் கடலை நோக்கி நீண்டு இருக்கும் நிலத்தோற்றம் _______ ஆகும்.

**கடல் வளைவு**